மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் அதிகமான அளவில் பாக்டரியை ஏற்படுத்தினால் நம் வேதைக்கு மேலேயே போய்விடும் என்கிற நிலை இருக்கிறது. ஆனால் சேலம் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் கூட்டுறவுத் துறையில் டாபியோக்கோவை கொண்டு அங்கே தயாரிக்க ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார். அதைப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் அதிகமான மருத்துவ மனைகள் இருப்பதனாலே இங்கே அதிக அளவில் க்ளூகோஸ் தேவைப்படுவதனால் மேலும் பல தொழிற்சாலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதற்கு விளக்கம் தந்தேன்.

Technological University.

*** 506 Q.—Thiru N. K. PALANISWAMY, Thiru K. A. WAHAB, Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :**

(*a*) whether there is any proposal to start a Technological University in this State ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தச் செலவு என்ன ஆகும்? மத்திய அரசின் பங்கு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு மத்திய அரசின் ஒப்புதலும், பல்கலைக் கழகத்தின் ஒப்புதலும் தேவை. அது கிடைத்தால் இந்தப் பல்கலைக் கழகத்தின் கட்டிடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியக் குழு 50 சத வீதம் உதவி அளிக்கும். முதலில் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

Thiru N. DENNIS—May I know the time when this University will be started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசின் அனுமதி கிடைத்துவிட்டால் வருகிற ஆண்டில் இருந்தே தொடங்கலாம்.

திரு. நா. வீராசாமி : ஒரு நாடு தொழில் வளம் பெருக இதுபோன்ற டெக்னலாஜிகல் யுனிவர்சிடி அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும். இது பற்றி நமது அரசு மத்திய அரசாங்கத்திற்கு எப்போது எழுதிற்று ?

ஏன் காலதாமதம் ஆகிறது? உடனடியாக இந்த ஆண்டிலேயே அமைக்கப்பட நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது பற்றிய செயற் குறிப்பு இரண்டு மூன்று ஆண்டுகளாகவே மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டு தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு நிலேக்குழு, துணைக்குழு ஒன்றை இதுபற்றிப் பரிசீலிக்க இங்கே அனுப்பிவைத் தார்கள். துணைக்குழுவினர் இங்கேயுள்ள அதிகாரிகளுடன் கலந்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிருர்கள். இதற்காக நாம் ஒரு சட்ட முன்வடிவைக்கூடத் தயாரித்து வைத்திருக்கிறேம். அவர்கள் அனுமதி கிடைத்தவுடன் இது கொண்டுவரப்பட்டு அமைக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: மத்திய சர்க்காரின் கொள்கை தங்களது அதிகார வரம்பை விரிவுபடுத்துவதாகவே இருக்கிறது. இதை உடனடியாக இங்கே அமைக்கவேண்டும் என்று நமது அரசு வற் புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; அதைத்தான் சொன் னேன். 3 ஆண்டு காலமாக வற்புறுத்தி வருகிறேம். மேலும் வற்புறுத்துவோம்.

திரு. எம். தேவராசன்: தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள கோவை மாவட்டத்தில் இந்தப் பல்கலேக்கழகத்தை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கான கட்டிடத்திற்கு மட்டும் 7 லட்சம் செலவாகும். சென்னையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் பெரிய அளவில் இருக்கிறது. பாலிடெக்னிக் காம்பசும் இருக்கிறது. கிண்டி பொறியியல் கல்லூரியில் 800 ஏக்கர் சொச்சம் நிலம் இருக்கிறது. கட்டிடம், இடம் ஆகியவற்றுக்கு அதிகச் செலவு இல்லாமல் இந்தப் பல்கலேக்கழகம் அமையவேண்டுமென்ருல் இன்றைக்குச் சென்னையில் இது அமைவதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஆ. பரந்தாமன்; இதுபோன்ற தொழில் நுட்ப பல்கலேக் கழகத்தை ஏற்படுத்துவது வேலேயில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கக் கூடப் பயன்படும். இந்தச் சிறப்புத் திட்டத்திற்கு மத்திய அரசும் மானியம் வழங்க நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது வேலேயில்லாத் திண்டாட்டத்தைக் குறைத்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லே. இன்றைக்கு செனட் அவையில் பன்னிரண்டு, பதிமூன்று பேர்கள் இருக்கிற இடத்தில் தொழில்நுட்பப்பிரிவுக்கு ஒருவர்தான் இருக்கிருர். தொழில் நுட்பப்பிரிவுக்குத் தனியான பல்கலேக் கழகம் என்றே அமைந்தால் அவர்களே முழு அளவில் இருந்து நல்ல முறையில் தொழில் கல்வி வளர்ச்சிபெற உதவியாக இருக்கும். மானியக் குழுவின் உதவி சிலபல

திட்டங்களின் அடிப்படையில் கிடைக்கும். அந்த வகையில் உதவிபெற வாய்ப்பிருக்கிறது.

முற்பகல் 9-30 திரு. எ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படி பொறி இயல் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும்போது, நம்முடைய மாநில அரசால் நடத்தப்படுகின்ற, மாநில அரசுக்கு உட்பட்ட பொறியியல் கல்லூரிகளை இதோடு இணைப்பதோடு மட்டுமல்லாமல், மத்திய அரசால் நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரிகளையும் இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, மாநில அரசின்கீழ் கொண்டு வர அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனியாக விவாதிக்கப்படவேண்டிய ஒன்று. மாநில அரசு சார்பாக நடைபெறுகின்ற கல்லூரிகளையும் தனியார் துறையின்கீழ் வருகிற கல்லூரிகளையும் இதன்கீழ் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் மத்திய அரசினுடைய உதவியோடு நடைபெற்று வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில், அதன் முழுத் தன்மையும் மாநில அரசுக்கு வர இருக்கிறது. அந்த நிலைமையிலேயே அது இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழ் வராது ஐ.ஐ.டி.-யை பொறுத்த அளவுக்குத் தனி முயற்சிதான் எடுக்கவேண்டும். அதைத்தனியாகப் பரிசீலிக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி அக்ரிக்கல்ச்சரல் யூனிவர்சிட்டிகள் பல மாநிலங்களில் இருந்தன. தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தோம். அதேபோல் டெக்னலஜி யூனிவர்சிட்டி எந்த எந்த மாநிலங்களில் இருக்கிறது? மத்திய அரசு அதுமாதிரி பல்கலைக் கழகம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதன் முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. வட மாநிலங்களில் ஓரிரண்டு இருப்பதாக எனக்குத் தகவல். அண்மையிலே, ஆந்திர மாநிலத்திலே இப்படி பல்கலைக் கழகம் வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, அதற்கான சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். இந்திய அரசு ஒப்புதல் கிடைக்கப் பெருமல் இருக்கிறது. அங்கே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறுர்கள்.

துணைவேந்தர்கள் மாநாடு

*507. வினா—திரு. சு. துரைசாமி:—மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் மாநிலத்துணை வேந்தர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டு முடிவுகள் பற்றி அரசுக்கு அதிகார பூர்வமான தகவல் வரவில்லை.